
தென்றல்
ஆசிரியர்
கண்ணதாசன்
ஜெயராஜ்.

# சாதிப்புளுகுகள் விலை மலிவு! வீசை எட்டணு! சிலம்பு வணிகரின் இன்றையச் சரக்கு!

"சிந்தித்து எழுதுக" என்று பிறரை மட்டும் சிந்திக்கத் தூண்டும் சிலம்புத் தமிழர் தமது 5-6-60 இதழில் "வள்ளுவர் காட்டும் தெய்வ நெறி" என்ருேர் கட்டுரை யாத்துள்ளார். சிந்திக்கத் தெரிந்தவன் மனிதன் என்று கருதப்படுவான்; அதற்கு வேலை கொடுக்காதவன் "அஃறிணை என்மனர் அவரல பிறவே"யாவர். ஆசிரியரது கட்டுரையை முழுதும் ஆராய்ச்சிக்கு எடுத்துச் சிந்திக்காமல் ஒரே ஒரு கூற்றைமட்டும் இக்கட்டுரையின் மையமாகக் கொள்வோம்.

சிலம்பு வணிகர் வள்ளுவப் பெருந்தகையை உயர்த்துவான் வேண்டித் தொல்காப்பியரைத் துணைக்கு அழைத்துத் தம் சிந்தனையின் அளவு எவ்வளவு உயர்வுடையது(!) என்று காட்டிக்கொள்கிருர்.

"தொல்காப்பியம் நால் வருணப் பாகுபாட்டினை, அவற்றிடையே நிலவிய உயர்வு, தாழ்வினை ஒப்புக்கொண்டுள்ளது. திருவள்ளுவரோ தொழில் வழி நால்வருணப் பாகுபாட்டை ஏற்றுக்கொண்டாலும்அவற்றிடையே நிலவிய உயர்வு-தாழ்வினை ஒப்புக்கொள்ள மறுத்தார். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது வள்ளுவர் கொள்கை."

மேலே கண்ட சிறிய பகுதி சிலம்பாளர் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட சிந்தனைச் செல்வமாகும். காப்பியரின் அறிவு-ஆற்றல் முதலியன செயற்பட்டு உருவாகிய பெரும் பேரிலக்கிய - இலக்கண நூலாம் தொல்காப்பியத்தின் உயர்வுக்கு மாசு கற்பிக்க முயலும் அவர் தம் அறிவுக்குரிய எல்லையை நமக்குக் காட்டிவிடுகிருர்.

1. தொல்லாசிரியர்தம் தொல்காப்பிய நூலுள் சாதியை ஒப்பியுள்ளாரா?

2 தொல்காப்பியர் பிறப்பு அடிப்படையில் நால் வருணப் பாகுபாட்டினைக் கூறுகிருரா? அல்லது மரபியலிற் காணப்பெறும் பாகுபாடு அறிவுக்குப் பொருந்துமா? அத்தகைய புறம்பான செய்தியைத் தொல்காப்பியர் செய்வாரா?

3. நால் வருணம் அல்லது குலம் என்ற அடிப்படை அகத்திணை, புறத்திணை இயல்களில் கூறப்பட்டுள்ளனவா?

4. வருண அடிப்படையில் உயர்வு தாழ்வு முறை நிலவியது என்பதற்குத் தொல்காப்பியத்தில் சான்றுள்ளதா?

மேற்கண்ட நான்கு விளுக்களையும் சற்றுத் தெளிவுபட ஆராய்ந்தால் அவரது அறியாமை புலனுகும்.

1. தொல்காப்பியப் பொருளதிகாரத்துள் ஒன்பது இயல்கள் உண்டு. மக்களைப்பற்றியும்,மக்களது பழக்க வழக்கங்கள், வாழ்வியல் முறைகள் முதலியவற்றைப் பேசும் இயல்கள் முதல் ஐந்தாகும். அவை: அகம், புறம், களவு, கற்பு, பொருள் ஆவன. இதை, தம்முள் அகத்திணையியலிற் காணப்பெறும் சில நூற்பாக்களை எடுத்துக்கொண்டு சிந்திப்போம்:

> "பெயரும் வினையும்
> என்று ஆருயி வகைய
> திணைதொறு மரீஇய
> திணைநிலைப் பெயரே"
> —(அகம் 22.)

தமிழகம் ஐவகை நிலங்களினடிப்படையில் ஐவகைத் திணையாய் (குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல்) பிரிக்கப்பட்டுள்ளது. அதனையொட்டி நிலத்தினடிப்படையில் மக்களின் பெயர் வழங்கும்; அல்லது அவர் செய்யும் தொழிலின் அடிப்படையில் அம்மக்களின் பெயர் வழங்கும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

> "ஆயர் வேட்டுவர்
> ஆடுஉத் திணைப்பெயர்
> ஆவயின் வருஉங்
> கிழவரும் உளரே"
> (அகம்-23.)

இந்த நூற்பாவில் முல்லை நிலத்தில் வாழும் மக்களில் தொழில் அடிப்படையில் ஆயர் எனவும் வேட்டுவர் எனவும் ஆண் மக்கள் பெயர் வழங்கப்படுவதைக் குறிப்பிடுகிருர்.

அதற்கு அடுத்த நூற்பாவில் ஐயமற்ற வகையில்

> "ஏனோர் மருங்கினும்
> எண்ணுங் காலை
> ஆவ வகைய
> திணைநிலைப் பெயரே"
> (அகம் - 24)

என்று அழுத்தம் திருத்தமாக திணையினடிப்படையில் பெயர்கள் வழங்கப் பெறும என்கிருர். அதையில்லாமல் பிறப்பின் அடிப்படையில் "வருணம்" என்று கொண்டு மக்கள் பிரித்து வழங்கப்பட்டதாகக் குறிக்கவில்லை தொல்காப்பியம். எனவே தொல்காப்பியர் சாதி முறைகளில் பழக்கமற்றவர்என்பது வெளிப்படை. மரபியலிற் 'சாதி'பற்றிக் காணப்படும் செய்திகளை அடுத்து ஆராய்வோம்.

2. எல்லை வீரர் 'சாதி' முறைகளை வெறுப்பவர் என்பதோடு கண்டிக்கவும் செய்கிருர். ஆனல் தொல்காப்பியரை வருணப் பாகுபாட்டிற்கு அழைத்துச் செல்வதுதான் தெளிவாகாத செய்தி. மரபியலுள் 70-ம் நூற்பாவிலிருந்து 84 வரை நால்வருணப் பாகுபாடு கூறப்படுவதாய்ச் சிலர் கூறுவர். இங்குத்தான் சிந்தனைத் தெளிவு வேண்டும். தொல்காப்பியர் தம் இலக்கண நூலில் ஒவ்வொரு கருத்தையும் எந்த முறையில் கூறுகிருர் என்பதையும் அந்த வரன் முறை இங்கு எந்த வகையில் பொருந்தவில்லை என்பதையும் எண்ணிப் பார்த்தால் இப்பதினைந்து நூற்பாக்களும் இடைச் செருகல் என்பது எளிதிற் புலனுகும்.

தொல்காப்பியர் ஒரு குறிப்பிட்ட பொருளை அல்லது பிரிவைப்பற்றிய இலக்கணம் கூறத் தொடங்கினுல் தொடங்கியது முதல் வேறு செய்திக்குப் போகாமல் எடுத்து முடிப்பது முழு நூலுணர்ந்தார் அறியும் உண்மையாகும்.மரபியலில் மக்களைப் பற்றியும் பேசுகிருர். 33-ம் நூற்பாவில்

> "மக்கள் தாமே
> ஆறறி வுயிரே
> பிறவும் உளவே
> அக்கிளைப் பிறப்பே"

என்று மக்களைப்பற்றிப் பேசத் தொடங்கியவர் அடுத்தடுத்து அந்தணர், வணிகர், வேளாளர், அரசர்பற்றிய பிறப்பு நிலைகளையும் குணங்களையும் கூறியிருந்தால் ஒருவேளை பொருந்தக்கூடும். ஆனல் 34 ஆம் நூற்பாவில் விலங்குகளைப் பற்றிக் கூறத் தொடங்கி 69 ஆம் நூறபா முடிய வரன் முறையோடு கூறுகிருர். 70 ஆம் நூற்பாவில் திடீரென்று தொல்காப்பியர் மக்களை நினைத்துக்கொண்டு (தூங்கி விழிப்பவன் பேசுவதுபோல்) முன்பின் தொடர்பில்லாமல்.

> "நூலே கரகம்
> முக்கோல் மணையே
> ஆயுங் காலை
> அந்தணர்க்குரிய"
> —(மரபியல்-70)

என்று அந்தணர் இயல்பைக் கூறுகிருர். ஆயுங்காலை அந்தணர்க்கு என்ருல், "ஆயாக்காலை யாவர்க்கும் உரிய" போலும்! 70 முதல் 84 வரை சாதி முறைகளைப் பேசியவர் 85 - ல் செடி, கொடி, மரங்களைப் பற்றிப் பேசுகிருர். இங்குதான் சிந்திக்க வேண்டும்!

**33-ல் மக்களைப் பேசுகிருர்.**

34 முதல் 69 முடிய விலங்குகளைப் பேசுகிருர்.

**70 முதல் 84 முடிய மக்கள் வருண இயல்பு பேசுகிருர்.**

85 முதல் 88 முடிய மரம் செடி கொடி இயல்பு பேசுகிருர். 33-ம் நூற்பாவை அடுத்துப் பேசப்பட வேண்டிய செய்தி மக்களைப் பற்றியதாய் இருக்குமாலுல் விலங்குகளைப் பற்றித் தொல்காப்பியர் பேசியிருக்க மாட்டார். எவ்விதத் தொடர்புமின்றி 70 முதல் 84 முடிய மக்களின் சாதி முறைகளை விலங்கிற்கும் - செடி கொடி மரத்திற்கும் இடையில் செருகி நுழைப்பது அறிவாலுயர்ந்த மேதை தொல்காப்பியர் வழியாகாது. மேலும் இத்தகைய "நூல் - கரகம்- முக்கோல - மணை" ஆகிய பொருள்களைப் பயன்படுத்திய அகத்திணை இயலோ, புறத்திணை இயலோ சான்ருேடு குறிக்கவில்லையே? சிந்திக்கவேண்டிய செய்தி. இப்பொருள்களை அந்தணர் எதற்கு, ஏன், எப்பொழுது பயன்படுத்தினர்? வேலும் வில்லும் வீரர் பயன்படுத்திய வெற்றியைப் புறம் உணர்த்துகிறது. அப்படியாயின் இவை எதற்குப் பயன்பட்டன? இவை அறிவிற்குப் பொருந்துமா? அது மட்டுமல்லாமல் இப்பதினைந்துநூற்பாக்களுற் சிலஒன்ருேடு ஒன்று மாறுபடுகின்றனவே!

> "இடையிரு வகையோர்
> அல்லது நாடிற்
> படைவகை பெருஅர்
> என்மனுர் புலவர்"—
> (பொருள்—மரபு-77)

என்று அரசரும் வணிகரும் அல்லாதோருக்குப் படைக்கலவகை கூறப்படமாட்டாது என்றவர்;

> "வேளாண் மாந்தர்க்கு
> உழுதூ ணல்லது
> இல்லென மொழிப
> பிறவகை நிகழ்ச்சி"
> —(மரபு-83)

என்று மேலும் வலிவோடு வேளாளருக்கு உழவுத் தொழிலைத் தவிர வேறு வினை இல்லை என்றவர்;

> "வேந்துவிடு தொழிலிற்
> படையுங் கண்ணியும்
> வாய்ந்தனர் என்ப
> அவர்பெறும் பொருளே"
> —(மரபு-82)

என்று முன்னுக்குப் பின் முரணுக வேளாளரும் படைக்கலன்களை ஏந்திச் செல்லலாம் என்று கூறுவாரா? அரசரும்,வணிகரும் படைக்கலன் பெறுவர் என்றுகூடச் சொல்லாமல்-பிறர் பெறத் தகுதியில்லை- "பெருஅர்" என்று 77-ல் கூறியவர் 82-ல் "பெறலாம்" என்று கூறுவாரா?

72-ம் நூற்பாவின் இறுதியில் "தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய" என்று வகை செய்கிருர். ஆனல் 83-ம் நூற்பாவில் செங்கோல், அஃதாவது அரசுரிமை மட்டும் (மற்றைய தொழில்களைக் கூருமல்) அந்தணருக்கும் உண்டு என்று "அந்தணுளர்க்கு அரசுவரை இன்றே" என்று கூறுகிருர். "இது எவ்வாறு வணிகருக்கு ஏறகாது?" என்ற விரு எழாதா?

இதுபோன்ற நூற்பாக்களை எழுதிச் சேர்த்த அரியவன் அந்தணுளனுய் இருப்பானே, அறியோம்! ஆனல் ஒன்றுமட்டும் உறுதி. தொல்காப்பியர் இவ்வாறு தம நூலுள் தாமே எழுதிய வரையறைகட்கு முன்னுக்குப்பின் பொருந்தாத முறையில் எழுதியிருக்கமாட்டார் என்பது உறுதி.

3. நால் வருண முறைகள் தொல்காப்பியத்தில் கூறப் பெறவில்லை. "வருணம்" என்ற சொல்லாட்சியே கிடையாது. அப்படிப்பட்ட அப்பட்டமான "வருணமுறை" எப்படியோ சிலம்பு வணிகருக்குக் கிடைத்தது(!) என்று அறியோம். கிடைத்ததோடு இல்லாததையும் பொல்லாததையும் எடுத்தெழுதித் தொல்காப்பியருக்கு மாசு கற்பித்தல் தமிழ்த்தாய்க்குச் சிறப்பாகாது!

4 வருண அடிப்படையில் (சிலம்புத் தமிழர்) உயர்வு-தாழ்வு இருப்பதாகக் கூறுகிருர், (!) தொல்காப்பியத்தில். ஏற்றத்தாழ்வு என்பது எதை ஒட்டி? தான் வைத்திருக்கும் செல்வத்தை வைத்தா? அல்லது அறிவைப் பொறுத்தா?ஏற்றத்தாழ்வு கணக்குப் பார்க்கிருர் சிலம்பாளர்.

தொல்காப்பியர் கருத்துப்படி "உயர்ந்தோர்" என்பது "உயர்திணை என்மனர் மக்கட் சுட்டே" ஆகும். பிறந்த மக்களில் "மக்கட்பண்பு" உடையாரே உயர்ந்தோர் ஆவர். ஏனையோர் மக்களாய்ப் பிறந்தும் அஃறிணையே ஆவர். அவ்வாறு பார்த்தால் அறிவு உலகியலில் உயர்வு கூறப் பயன்படுகின்றது. அரசுரிமை அறிவில் வல்லவனுய் இருந்து தொழிலாற்றுபவன் அரசனுயும்; மனம் கோடாது நூலறிவு கொண்டு அறிவுரை தருபவன் அந்தணனும்; வாணிபம் செய்யுந் திறமை கொண்டு வணிகனும்; உழவுத்தொழில் வன்மை கொண்டு வேளாளனும் தொழில் அடிப்படையில் வாழ்க்கை நடத்திவந்திருக்கிருர்கள். அதை விடுத்து அரசனுக்கும் வேளாண்மாந்தருக்கும் உள்ள பணியையும்-நிலையையும் ஒட்டி "ஏற்றத் தாழ்வுாழ்வு" கூறுதல் அறிவுக்குப் புறம்பாகும்.

சிலம்பு வணிகர் சிந்திய சொற்கள் சீற்றத்தை எழுப்பினும், அறிவுடையோர் அறியாமை கண்டவிடத்து அறிவு கொளுத்துவதே கடனுகும். பேராசிரியர் கணக்காயர் டாக்டர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் தம் பொருட்படல நூலிலும், பேராசிரியர் வெள்ளைவாரணனுர் அவர்கள்தம் "தொல்காப்பியம்" எனும் வரலாற்று நூலிலும் தொல்காப்பியருக்குச் சாதிமுறை உடன்பாடில்லை என்றும், இடைச்செருகலே என்றும் விளக்கியுள்ளமை 'சிலம்பு' விளையாட்டாகக் கருதாமல் படித்துப் பார்த்தல் பயன் தரலாம்.

தமிழ்மொழியைச் சிலம்புக்குள் மட்டும கறறுத் துறைபோயபின், தொல்காப்பியம சிறிய நூல் என்று சிந்தியாமல் எழுதியது குறைமதியாகும். பெரும்புலவர் வள்ளுவரது வான்புகழ் சிறப்பிற்குத் தொல்காப்பியரைக குறைகூறித் தமிழ்-உள்ளங்களைப புண்படுத்தியிருக்க வேண்டாமே!

தமிழ்நூற் புலமையுடையார் அனைவரும் வள்ளுவரது உயர்வை நன்கு அறிவர் என்பதையும் தொல்காப்பியர் உள்ளத்தையும் குறைவற அறிவர் என்பதையும் நீங்கள் உணராமற் போனமை கண்டு தமிழ்மக்கள் சிரிப்பதைத் தவிர சிந்திக்கவா முடியும்?

இனியாவது சிலம்பு தூக்குவோர் சிந்தித்து எழுதுவராக!

—இராம. இராமநாதன் பீ. ஏ. (ஆனர்சு)

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

# எண்ணம்

மலர் 7 ‖ 30-7-'60 ‖ இதழ் 7

## போர் முழக்கம் ! போர் முழக்கம் !!

[படை நடைப் பாட்டு—Marching Song]

வேலெடுத்து வில்லெடுத்து
வீரர் கூடுவார்--இவர்
வெல்கவென்று மாதர்நின்று
வாழ்த்துப் பாடுவார்.
மேலெழுந்து பாய்ந்தடித்து
வெற்றி காணுவார்--அவர்
வீரவாழ்வைப் பாடலாகப்
பாணர் பாடுவார்.
காலமுற்றும் பேர்படைத்த
கன்னி நாட்டிலே--இரு
காதறுந்த மூளிஇன்று
ஆள வந்ததே
வாலறுந்த மந்தியாய்நம்
மாளி கைக்குளே--தன்
மானமற்ற இந்திஇன்று
வாழ வந்ததே!

பொங்குமுத் தமிழ்க்குடத்தைப்
போட்டு டைப் பதோ--நாம்
பூனையாகி மானமின்றிப்
பார்த்தி ருப்பதோ
சிங்கமொன்று நாயிடத்துச்
சேவை செய்வதோ--அதைச்
செய்துவைத்த சட்டமென்று
நாமுங் கொள்வதோ?
திங்களை விழுங்கவந்த
தீய நாக்கினைக்--கூறு
செய்தடித்து வாய் கிழித்துச்
செய்வம் ஆக்கினை
சங்கொலித் தெழுந்துவீரம்
தாங்கி ஓடுவோம்--போட்ட
தாழ்திறந்து இந்திநாயைக்
கொன்று போடுவோம்

என்குலத்தர் என்னினத்தர்
என்ன கத்துளார்--இவர்
இந்திபேசித் தாய்மறக்கத்
தம்மனம் பொருர்.
பொன்னிழந்து வாழ்விழந்து
சாய்ந்த போதிலும்--மாதர்
பூவிழந்து பொட்டிழந்து
போன போதிலும்
கண்ணிழப்ப தில்லை யென்று
போரி லேறுவார்--மூடர்
கண்டிருக்கத் தென்னகத்தர்
நீதி காணுவார்
இன்றுவீரர் நன்றுகாண
ஒன்று கூடுவார்--இவர்
என்று மெங்கள் மக்கள்வாழ
வென்றி காணுவார்!

கண்ணதாசன்

## தாய்த் தமிழே ! வணக்கம் !

ஓநாய், ஆட்டை உறவுகொள்ள அழைக்கின்றது.

நரி, மாட்டை நேசிப்பதாகச் சொல்கிறது.

காஞ்சிரங்காய், மாங்கனியோடு தான் பிறந்ததாகச் சொல்கிறது.

ஆழ்கடல் முத்துடன் தான் ஒத்தது என்று. கண்ணுடித்துண்டு சொல்கிறது!

ஆம்! இந்தி வெறியர்கள் "நாம் எல்லோரும் ஒன்ருய் வாழ்வோம்!" என்கின்றனர்.

தமிழகத்தாருக்கு வலை விரிக்கும் பட்டேல் கூட்டத்தார், வடக்கும் தெற்கும் ஒன்றே என்கின்றனர்!

வடக்கின் இரும்பு நெஞ்சக்காரர்கள், சீரிளமைத் திராவிடத்தாரும் செத்த வடமொழியாரும் ஒன்ருய்ப் பிறந்தோர் எனக் கதை சொல்கின்றனர்.

சொல்லாட்சியும் பொருட் செறிவும் மூத்த பழமையும் மிக்க திராவிட மொழி முத்துக்களோடு தானும் ஒத்தது என்று கண்ணுடித்துண்டாம் இந்தி கதைக்கிறது.

வஞ்சகத்துக்கு வார்த்தைகளால் வடிவம் தந்து, வளைத்துவிடத் துடிக்கின்ற ஏகாதிபத்தியத்தின் போக்கு அப்படித்தான் இருக்கிறது. நம்மையெலாம் மூடர்களாய், ஏமாளிகளாய் கணக்கிட்டுவிட்ட தில்லி ஏகாதிபத்தியக்காரர்கள் அப்படித்தான் சொல்கின்றனர். செரு முகத்தில் எதிர்த்து அழிக்கமுடியாதவர்கள், தெரு முனையில் ஒற்றுமைச் சிந்து பாடி அழிக்க முனைகின்றனர். எல்லாம் வல்லவர்களல்லவா? அதனுல்தான் நம்மை எப்படியாகிலும் அழித்திடத் துடிக்கின்றனர்.

ஒற்றுமைச் சிந்து இசைக்கின்றவர்கள் சொல்கின்ற மற்ருெரு காரணம் இது: **பெரும்பான்மையினர் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கின்றனராம்!**

வாதத்திற்காக ஒப்புக்கொள்வோம், இந்தி பேசுவோர் பெரும்பான்மையராயிருக்கின்றனர் என்று! ஆனல் பெரும்பான்மை என்பது என்றும் நிலைக்கக்கூடியதா? இப்போதே ஒரு பக்கம் சீனர் படை எடுப்பும், இன்னொரு பக்கம் நாகர் போராட்டமும், எதிர் பக்கத்தில் காசுமீர்ச் செருமுகமும் இருக்கின்றன. இதுவரை காசுமீரத்தில் செத்தவர்கள் எத்தனை பேர்? இனி சீனப் போர் மூண்டால் மடிபவர் எத்தனை பேர்? போர் வர வேண்டுமென்பதல்ல நம் ஆசை! ஆனல் போர் மூண்டு பல இலட்சத்தவர் மாண்டால், வட இந்தியரின் பெரும்பான்மை நிலைக்குமா? இரண்டாம் உலகப் போரில் வீழ்ந்த இரோசிமாவிலும் பிற நகரங்களிலும் மாண்டவர்கள் எண்ணிலடங்காரே!

கொடும்நோயாம் பிளேக்கால் கொள்ளை போன இங்கிலாந்து நகரொன்றின் கதையும் உங்களுக்குத் தெரியாதோ? காலராவும் பிளேக்கும் வடநாட்டு நகரங்களை வளைத்து அழிக்காவோ? சோற்றுப் பஞ்சத்தால் மாண்டவர் நூற்றுக்கணக்கிலா அடங்கினர்? வங்காளத்தில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தின் காட்சிகளை அதற்குள் மறந்தீரோ? புதைக்கவும் ஆளற்று, தெருக்களிலே பிணங்கள் கிடந்த கொடுமையைப் புகைப்படம் பிடித்துக் காட்டினரே! துணைக்கண்டமெங்குமுள்ள அத்தனை மக்களும் அவற்றைக் கண்டு கண்ணீர் வடித்து உதவினரே! இங்கு இதைக் குறிப்பிடும் நோக்கமே, கொடிய பஞ்சங்கள் பல குறைக்கக்கூடும் பெரும்பான்மையை என்பதைக் காட்டுவதற்கே!

அல்லாது ஏழ்மையாலும் எத்தனையோ இலட்சம் பேர் மாள்கின்றனரே! இதனை நாங்கள் உணர்ந்திருப்பது போன்றே உமது 17-வது காங்கிரசு மாநாட்டைக்கூட்டியோரும் உணர்ந்திருக்கின்றனரே! பதினேழாவது காங்கிரசில் மூன்ருவது தீர்மானத்தை முன்மொழிந்தார், தோழர் முத்கோல்கர். அவர் முன்மொழிந்து பேசியது பற்றி இப்படி எழுதினர்: "கூட்டம் கூட்டமாக (இந்தியத் துணைக்கண்ட) மக்கள் பட்டினியால் தத்தளிக்கின்றனர் ஐந்து மாகாணங்களில் மக்களின் தொகை 1891-ல் இருந்ததிலும் மிகவாகக் குறைந்திருக்கின்றது. 1901-ம் ஆண்டையக் குடிமதிப்புக் கணக்குக் காட்டிடுகிறது. பத்து இலட்சம் மக்கள் செத்திருக்கின்றனர், இந்தப் பட்டினிக் கொடுமையால்; பஞ்சத்தால்! இதை அறிகிரேும்!"

இப்படி எழுதப்பட்டிருக்கிறது ஏழ்மையின் கொடுமையைப் பற்றி; பஞ்சத்தின் கோரம் பற்றி! இத்தனையையும் படித்தவர்கள் - வங்கப் பஞ்சத்தை உணர்ந்தவர்கள் - இனி என்றும் வடக்கில் பஞ்சம் வரவே வராது என்பார்களா?

வெள்ளக் கொடுமையும் இனக் கலவரங்களும் வெகுவாக வடக்கத்

—6-ம் பக்கம்—

சென்னையில் மாபெரும்

**இந்தி எதிர்ப்பு மாநாடு**

கோடம்பாக்கம் அண்ணு நகர்,
தாளமுத்து-நடராசன் அரங்கில்

31-7-60 ஞாயிறு பகல் 2-மணியளவில்

துவங்கும்.

★ தலைவர்: **அண்ணு** ★

துவக்கி வைப்பவர் **இரா. நெடுஞ்செழியன்**

கழக முன்னணி வீரர்கள்
கலந்துகொள்வார்கள்

நன்கொடை:

ரூ. 5; ரூ. 1; ரூ. 0.50; பெண்களுக்கு: ரூ. 0.25

ஈ. வி. கே. சம்பத் — வரவேற்புக்குழுத்தலைவர்
கே. ஏ. மதியழகன் — வ.கு. செயலாளர்.




## 14. அவனைக் காதலிக்காதே!

அண்ணாமலைப் பண்டிதரைக் கண்டவுடன் தங்கத்திற்கு உள்ளம் பதறியது ஏனென்றால், அவர் தன்னைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறார் என்ற எண்ணம்தான். அண்ணாமலைப் பண்டிதர் எப்போதும் தங்கத்திடம் சிடுசிடுவென்று நடந்துகொண்டார். அவளிடம் அன்பாகப் பேசியதே கிடையாது. ஆகவே, அவள் அவருக்குப் பணிவிடை செய்யும் நேரம் போக அவரிடம் அணுகிப் பழகியதோ பேசிக்கொண்டிருந்ததோ கிடையாது. ஆனால், அவர் தன்னைப் பற்றி-தன் அந்தரங்கத்தைப் பற்றி நன்றாக அறிந்துவைத்திருக்கிறார் என்பதை அவள் பல சந்தர்ப்பங்களிலே உணர்ந்திருக்கிறாள்.

மற்றவர்களுடைய அந்தரங்க விஷயங்களிலே தலையிடுவது மனிதத் தன்மையல்ல. அதிலும் அண்ணாமலைப் பண்டிதர் போன்ற ஒரு பெரிய மனிதரிடம் இவ்வளவு அற்பமான குணம் இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது.

ஒரு சிலர் இருக்கிறார்கள்; அவர்களுக்குத் தங்கள் வேலைகளைப் பார்க்கவே சரியாக நேரமிருக்காது. ஆனால், மற்றவர்கள் என்ன செய்கிறார்கள், எங்கே போகிறார்கள் எவருடன் கூடுகிறார்கள், பேசுகிறார்கள், குலவுகிறார்கள், எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் என்றெல்லாம் ஊடுருவிப் பார்ப்பார்கள். இதையெல்லாம் தெரிந்துகொள்வதால் அவர்களுக்கு ஏதேனும் பயனிருக்குமா என்றால் அதுவும் இருக்காது. என்ன பலன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு ஒரே ஒரு பலன் மட்டும் இப்படிப்பட்ட உளவறி தொழிலால் உண்டு. அது என்னவென்றால், பிறருடன் இதைப் பற்றிப் பேசிப் பொழுதுபோக்குவதாகும். ஒரு சிலர் இந்தப் பலனைக்கூட அனுபவிப்பதில்லை. மற்றவன் நலமாக வாழ்வதைப் பார்த்துப் பார்த்து உள்ளத்திற்குள்ளே பொறாமைப்பட்டுப் பொறாமைப்பட்டு வெளியிலும் சொல்ல மாட்டாமல், உள்ளுக்குள்ளும் அடக்க மாட்டாமல் பொருமிப் பொருமி வெந்து நொந்து செத்துக்கொண்டிருப்பார்கள்.

அண்ணாமலைப் பண்டிதர் இப்படிப்பட்ட அற்பக்குணம் படைத்தவரல்ல என்பது எல்லோருக்கும் தெரியும்; தங்கத்துக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், அவர் தன்னிடம் மட்டும் பெரிய மனிதராக நடந்துகொள்ளவில்லை என்பதை நெடுநாளாகவே தங்கம் உணர்ந்து வருகிறாள். இப்போதும் அவருடைய நடவடிக்கை அதற்கு விதிவிலக்கல்ல.

தன்னிடம் நடராசன் எதுவும் கூறிவிட்டுப் போகவில்லையா என்று அவர் கேட்டபோதே. அவன் கூறிவிட்டுப் போயிருக்கிறான் என்பதை அவர் நன்றாக அறிந்திருக்கிறார் என்பதைத் தங்கம் புரிந்துகொண்டாள். இப்போது திரும்பவும் அதுபற்றிக் கேட்டுத் தன் உள்ளத்தைப் புண்ணாக்கிக் கண்டு மகிழவே அவர் தன்னைத் தொடர்ந்து வந்திருக்கிறார் என்ற எண்ணம் தங்கத்திற்கு உண்டாகியது. ஆகவேதான் அவர் என்ன கேட்பாரோ என்னவோ என்ற அச்சம் அவளுக்கு ஏற்பட்டது.

அண்ணாமலைப் பண்டிதர் அவளைக் குறும்பாகப் பார்த்துக்கொண்டே, "தங்கம், உண்மைதானா? நடராசன் உன்னிடம் எதுவும் சொல்லிவிட்டுப் போகவில்லையா?" என்று கேட்டார்.

தங்கம் எதுவும் பதில் சொல்லவில்லை. பதில் சொல்லக்கூடிய நிலையில் அவள் இல்லை.

அண்ணாமலைப் பண்டிதர் அமைதியாக நின்றுகொண்டிருந்தார்.

தங்கம் வாய் திறவாது தலை குனிந்தபடி நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய உள்ளத்திற்குள்ளே பலமான போராட்டம் ஒன்று நடந்துகொண்டிருந்தது. அது மெல்ல மெல்ல அடங்கியது. அவளும் தாழ்ந்து குனிந்திருந்த தலையை மெல்ல மெல்லத் நிமிர்த்தினாள். அப்போதும் அண்ணாமலைப் பண்டிதர் அங்கேதான் நின்றுகொண்டிருந்தார், இப்போது அவர் முகத்திலே குறும்பு விளையாடவில்லை. சற்றுமுன் தோன்றிய அந்த அற்பத்தனமான குதர்க்கவாதப் புன்சிரிப்பு அப்போது அவர் முகத்திலே தென்படவில்லை. கருணையே வடிவான புத்தர் பிரானின் முகத்திலே தோன்றிய அந்த அமைதி நிறைந்த புன்சிரிப்பு அப்போது அண்ணாமலைப் பண்டிதரிடத்திலும் காணப்பட்டது. சாந்தி மார்க்கத்தை உலகுக்கெல்லாம் போதித்த காந்தியண்ணலின் பொக்கைவாயிலே மிளிர்ந்த அந்தப் பொன்மலர் பூத்ததொத்த மென்மையான புன்சிரிப்பு அப்போது அண்ணாமலைப் பண்டிதரின் இதழ்களுக்கிடையே மின்னித் தோன்றியது. அந்த அழகிய புன்சிரிப்புடன் கூடிய அவருடைய முகத்தைப் பார்த்ததும் தங்கத்திற்கு மனத்திற்குள்ளே ஒரு சலனம் ஏற்பட்டது. மனத்தகத்துக்குள்ளே போராடிப் போராடிக் கடைசியாக அவர் எது கேட்டாலும் சொல்வதில்லையென்ற தீர்மானமான முடிவுக்கு வந்து தலை நிமிர்ந்த தங்கம் இப்போது அவர் எது கேட்டாலும் சொல்லக்கூடிய பச்சைக்குழந்தையாக மாறிவிட்டாள். நொடிநேரத்தில் அவளுடைய முடிவை மாற்றிக் கொள்ளச் செய்யும்படியான ஆற்றல் அவருடைய அந்தப் புன்னகைக்கிருந்தது!

"தங்கம்! என்னிடம் உள்ளதைக் கூறிவிடு! நான் உனக்குக் கெடுதல் செய்யமாட்டேன்" என்று பரிவோடு கூறினார் அண்ணாமலைப் பண்டிதர்.

அந்தப் பரிவு தங்கத்தை ஆட்கொண்டுவிட்டது. அவரிடம் என்றும் ஏற்படாத ஒரு நம்பிக்கையை அவளுக்கு ஏற்படும்படி செய்துவிட்டது.

தன்னைப் பெற்ற தாயிடம்கூட இதுவரை அவள் கூறத் துணியாத இரகசியங்களைத் தங்கம் அவரிடம் கூறத் தயாராகிவிட்டாள்.

"ஆம். என்னிடம் சொல்லிவிட்டுத்தான் போனார். ஆனால், ஊரைவிட்டுப் போவதாகச் சொல்லிவிட்டு போகவில்லை" என்றாள் தங்கம்.

"வேறு என்ன சொன்னான்?" என்று கேட்டார் பண்டிதர்.

"அவர் என்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமாம். எனக்குச் சம்மதமா?" என்று கேட்டார்.

"நீ என்ன சொன்னாய்?"

"நான் என்ன சொல்லுவேன். எனக்கு நோக்கமில்லை என்றுதான் சொன்னேன்?"

"ஏன், அப்படிச் சொன்னாய்?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும், தங்கத்தின் வாய் அடைத்துப் போய்விட்டது.

"தங்கம், அவன் நல்ல பையனாயிற்றே! ஏன்...உனக்கு அவனைப் பிடிக்கவில்லையா?"

இதற்கும் தங்கம் பதில் சொல்லவில்லை.

அண்ணாமலைப் பண்டிதர் மெல்ல அவளருகிலே நெருங்கினார். அவள் முதுகை அன்போடு தடவிக் கொடுத்தபடி, "மகளே, உனக்கு வேறு யார் மீதும் அன்பு இருக்கிறதா? இருந்தால் சொல்!" என்று கேட்டார்.

தங்கத்தால் அந்த நேரத்தில் அவருக்குப் பதில் சொல்லாமல் இருக்க முடியவில்லை. என்னவோ தெரியவில்லை, அவர் தன்னைத் தம் சொல்லுக்குக் கட்டுப்படுத்தி விட்டதாகத் தோன்றியது. ஆமென்ற தோரணையில் அவள் தலையை அசைத்தாள்.

"மகளே, தங்கம், யார் உன் அன்புக்குப் பாத்திரமானவன்!" என்று மெல்லக் கேட்டார்.

அவருடைய இதமான கேள்விகள் ஒவ்வொன்றும், பிடாடன் ஒருவன் பாம்பைப் பிடிப்பதற்கு மகுடி வைத்து ஊதுவதைப்போல் இருந்தன. மகுடிக்கு வசப்பட்டு ஆடுகிற பாம்பு போல் ஆகிவிட்டாள் தங்கம். அவள் தன் நிலையில் இல்லாதவளாய், அவர் சுண்டிவிட ஆடுகின்ற விசைப் பொம்மையாய் இயங்கிக்கொண்டிருந்தாள். கண்கள் தரையை நோக்கக் கால் பெருவிரல் மண்ணைத் தோண்ட வெட்கத்தோடு குனிந்து நின்றுகொண்டு, நினைந்த நெஞ்சு மகிழ,

சொல்லும் வாய் மகிழ "அத்தான் சுந்தரேசன்" என்ற வார்த்தைகளை இனிமையான குரலில் இசைத்தாள்.

அந்தப் பெயரைக் கேட்டதும் அண்ணாமலைப் பண்டிதர் பாம்பை மிதித்ததுபோல் திடுக்கிட்டுப் போனார். "என்ன? அவனையா? அந்த அயோக்கியனையா? அந்தக் கூத்திக் கள்ளனையா நீ காதலிக்கிறாய்? தங்கம் உனக்கென்ன பைத்தியமா?" என்று சீறினார் அவர். இவ்வளவு நேரமும் முற்றிலும் புதிய யாதிரியாக நடந்து கொண்ட பண்டிதர் இப்போது பழைய படி சீற்றமே உருவாக மாறியதைக் கண்ட தங்கம் அஞ்சித் தலை நிமிர்ந்து அவரை நோக்கினாள். அண்ணாமலைப் பண்டிதரின் உதடுகள் துடித்தன. அவருடைய உறுப்புக்கள் ஒவ்வொன்றும் நடுங்கின. அவருடைய நெற்றியில் வியர்வை யரும்பி நின்றது. கண்கள் நன்றாகச் சிவந்துவிட்டன. அவர் ஏதோ சிந்திப்பவர்போல் வானத்தை நோக்கிக்கொண்டு நின்றார். பிறகு தங்கத்தைக் கூர்ந்து நோக்கினார். பையப் பைய அவருடைய சீற்றம் தணிந்தது. பிறகு மறுபடியும் சாந்த உருவினராய் மாறிவிட்டார்.

"தங்கம், உன் மனத்தைப் புண்படுத்திவிட்டேனா?" என்று வருத்தப் படுபவர்போல் கேட்டார்.

தங்கம் அவர் முகத்தை ஆவலுடன் நோக்கினாள்.

"மகளே. நான் சுந்ரேசனைப்பற்றி ஒரு மாதிரியாகச் சொல்கிறேனென்று எண்ணாதே! அவனுக்கு ஏற்கனவே ஒரு மனைவியிருக்கிறாள். போதாக் குறைக்கு வைப்பாட்டி வேறு வைத்திருக்கிறான். அதுவும் போதாதென்று, பாவம், ஒன்றும் அறியாத பேதைப் பெண்ணாகிய உன் வாழ்வையும் கெடுக்கத் திட்டமிட்டுவிட்டான் போலிருக்கிறது! மகளே, உன்னை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன், நீ அவனுடைய வெறிக்கு இரையாகிவிடாதே!" என்று சொன்னார் அண்ணாமலைப் பண்டிதர். இந்த எச்சரிக்கை மொழிகள், தங்கத்திற்கு ஒருவிதமான சந்தேகத்தை எழுப்பின. ஆனால் அண்ணாமலைப் பண்டிதர் தொடர்ந்து சொன்ன வார்த்தைகள் அவளுடைய சந்தேகத்தைக் களைந்துவிட்டன.

"தங்கம், நீ நடராசனை மணந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நான் சுந்தரேசன் மீது அவதூறு சொல்லுவதாக எண்ணாதே! நடராசனை மணப்பதும் மணவாமல் இருப்பதும் உன் விருப்பம். கட்டாயப்படுத்தி ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்கும் அறிவீனர்களின் கொள்கையை நான் ஆதரிப்பவனல்ல. ஆனால், கண்ணை மூடிக்கொண்டு கட்டாந்தரையில் முட்டிக்கொள்ளும் குருட்டுத் தனத்தை வெறுப்பவன் நான். மகளே, சுந்தரேசனைப்பற்றி நான் சொல்லுகிற வார்த்தை ஒவ்வொன்றும் உண்மை. இதை விரைவில் நான் உனக்கு மெய்ப்பித்துக் காட்டுவேன். என்ன ஆனாலும் சுந்தரேசனிடம் நீ பற்று வைக்காதே! அவனை மனிதனாக நீ மதிக்கவே கூடாது. அவன் மனிதத் தன்மையே யில்லாதவன்! மிருகங்களுக்குள்ள ஒவ்வொரு நற்குணங்கள்கூட இல்லாதவன். மிகவும் பொல்லாதவன். மான அவமானம் பாராதவன்! தன்னுடைய சுகத்தையே பெரிதாகக் கருதுவானே யல்லாமல், மற்றவர்கள் எப்படிப் போனாலும் சரியென்று எண்ணுபவன். அவன் வலையில் நீ விழுந்துவிடாதே! மகளே! இந்தப் பயங்கர மிருகத்திடமிருந்து நீ தப்பிவிட்டாய் என்ற நிலை ஏற்பட்டால்தான் எனக்கு நிம்மதி ஏற்படும். உன் தாய் தந்தையருக்கு இப்போது இருக்கின்ற நிம்மதி போகாமல் இருக்கும்! தங்கம் நான் சொல்வதைக் கேள்! உன் நன்மைக்காகச் சொல்லுகிறேன்; உன் குடும்ப கௌரவத்துக்காகச் சொல்லுகிறேன். இனி அவனை மனத்தாலும் நினைக்காதே!" படபடவென்று சொல்லிவிட்டு அண்ணாமலைப் பண்டிதர் விடுவிடுவென்று வீட்டை நோக்கிச் சென்றுவிட்டார்.

தங்கம் ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்தாள். அண்ணாமலைப் பண்டிதர் அத்தான் சுந்தரேசன் மேல் ஏன் இத்தனை தூரம் வெறுப்பாகப் பேசுகிறார் என்று அவள் எண்ணிப் பார்த்தாள். சில சமயம் அவர் பேச்சைக் கேட்டபோது "ஆம்! அவர் சொல்வது உண்மைதான்" என்று தோன்றியது. சில சமயம், "சேசே! அப்படியிருக்காது!" என்று தோன்றியது.

இருந்தாலும், தன் உள்ளத்தில் பதிந்துவிட்ட அத்தான் சுந்தரேசன் உருவத்தை அவளால் நீக்க முடியவில்லை.

அண்ணாமலைப் பண்டிதர் போவதையே பார்த்துக்கொண்டிருந்த தங்கம், அவர் வீட்டுக்குள் சென்று மறைந்ததும் தரையில் சிறிது நேரம் உட்கார எண்ணிக் குனிந்தபோது அவள் தோளை யாரோ பிடிப்பதுபோலிருந்தது. தங்கம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

தொடரும்


விற்பனையாகிறது.

## இந்திப்போர்

(ஈ. வெ. கி. சம்பத். எம். பி.)

தமிழகத்தின் போர்க் குரல்!

தென்னகத்தின் விடுதலைக்குரல்!

கழகத்தின் உரிமைக் குரல்!

அண்ணன் சம்பத்தின் உணர்ச்சிக் குரல்!

50 பக்கங்கள் விலை அணா எட்டு.

குறிப்பு: விற்பனையாளர்களுக்கு 25 சத வீதம் கழிவு உண்டு.

விபரங்கட்கு:

முல்லைப் பதிப்பகம்

முசிறி. திருச்சிமாவட்டம்.


# வெல்லத் தமிழ் காக்க வேங்கையெனப் போராடு!

(ஞானரத்தினக் குறவஞ்சி மெட்டு)

போரென்ற முழக்கம் புறப்பட்ட தேனடி தோழி?
நேருவின் வாக்கு நிலைமாறிப் போனதால் தோழா!

தவறும் படி நேரு தந்தவாக் கென்னவோ தோழி?
எவர் மீதும் விருப்பின்றி இந்தித்திணி யோமென்றே தோழா!

இந்தியைக் கட்டாயம் இன்றேன் திணித்தாரோ தோழி?
அந்தக் குடித்தலைவர் ராஜேந்திரர் ஆணைதான் தோழா!

கட்டளை யிட்டவர் கருத்துத்தான் என்னேடி தோழி?
சட்டத்தால் எண்ணத்தைச் சாதிக்க லாமென்றே தோழா!

எண்ணத்தில் என்னதான் எண்ணி யிருக் கின்றார் தோழி?
உண்மையில் இந்திக் குயர்வு தருமெண்ணம் தோழா!

இந்தி உயர்வானால் ஏற்படும் தீதென்ன தோழி?
செந்தமிழ் நலிந்து சிதைந்திடும் காணென்றன் தோழா!

ஒன்று வளர்ந்தால் ஒன்று தளருமோ தோழி?
கன்றொன்று மேய்ந்தால் களத்துப் பயிரென்னும் தோழா!

ஆங்கிலத் தால்தமிழ் அழிந்து போனதோ தோழி?
தீங்குகள் ஆயிரம் செவிமடுப் பாயென்றன் தோழா!

அறிவுக் கலையெல்லாம் ஆங்கிலத் துண்டேடி தோழி?
குறைந்தது தமிழென்றால் ஆங்கிலங் கொண்டதால் தோழா!

விஞ்ஞான நூலுக்கு வேண்டுமே ஆங்கிலம் தோழி!
எஞ்ஞான மானாலும் எளிதாகும் தமிழாலே தோழா!

கலைச்சொற்கள் தமிழிலே காண முடியுமோ தோழி?
தலைப்பட்டால் எத்தையும் தமிழிலே யாக்கலாம் தோழா!

அயலார் மொழியென்றால் ஆத்திரம் ஏன்கொண்டாய் தோழி?
அயலார் மொழிநம்மை அடிமைப் படுத்தலால் தோழி!

முன்னேற முடியாமல் முத்தமிழ் நின்றதேன் தோழி?
அன்னிய மொழிகளின் ஆதிக்கம் ஓங்கியதால் தோழா!

அன்னிய மொழியான ஆங்கிலம் போய் விட்டால் தோழி?
இன்று புதிதாக இந்தி நுழைகிறதே தோழா!

ஒற்றுமை இந்தியால் உண்டாகும் என்கிறார் தோழி!
மற்றவர் உணர்ச்சியை மதியாதார் கூற்றிது தோழா!

உறவுக் கொருமொழி உண்மையில் வெண்டாமோ தோழி?
வெறிகாரர் கட்டாய உறவை விரும்பாதே தோழா!

வெறிகாரர் என்றுநீ விளம்புவ தேனோடி தோழி?
நெறியற்ற முறைகளில் நீசத் தனம்புரிந்தார் தோழா!

நீசத் தனமென்ன நிகழ்ந்தது சொல்லடி தோழி?
பேசினால் இந்தியிலே பேசென்று கல்லெறிந்தார் தோழா!

தாய்மொழி பேசாரைத் தண்டித்தல் தவறோடி தோழி?
போய்ப்பேசி நின்றோர்க்குப் புரியாத மொழியது தோழா!

இப்போதே வெறியாட்டம் இத்தனை என்றிட்டால் தோழி?
தப்பாமல் பின்னாலே சர்வாதி காரம்தான் தோழா!

இந்தி வெறியாளர் எண்ணம் நிறைவானால் தோழி?
செந்தமிழ் ஓங்கச் சிறிதும் இடமில்லை தோழா!

வெறிப் போக்கைத் தடுக்கும் விதமென்ன சொல்லடி தோழி?
நெறியாகப் போராடி நிறுத்துதல் காணென்றன் தோழா!

அடக்கு முறையை அவிழ்த்து விடுவாரே தோழி?
துடிக்கு முணர்ச்சிக்குத் துன்பம் பெரிதில்லை தோழா!

சீறி யெழுவோரைச் சிறையில் அடைப்பாரே தோழி?
ஊறிப் பெருகும் உணர்ச்சியைத் தடுப்பாரோ தோழா?

குண்டும் தடியடியும் மண்டை பிளக்குமே தோழி?
தண்டமிழைக் காப்போர்க்குக் குண்டு மலர்ச்செண்டு தோழா!

கையிழந்து காலிழந்து கவலைப் படநேரும் தோழி!
மெய்யிழந்து போனாலும் மேன்மைத் தமிழ்சிறக்கும் தோழா!

உயிர்ச்சேதம் கூட உண்டாகக் கூடுமடி தோழி!
உயர் தமிழைக் காப்போர்க் குயிரும் பெரிதல்ல தோழா!

பண்டைத் தமிழ்வீரர் பண்பை எனக்களித்தாய் தோழி!
வண்ணத் தமிழ் காக்க வாழ்வைப் பயன்படுத்து தோழா!

சொல்லில் உணர்ச்சியினைத் தோய்த்துத் தருகின்றாய் தோழி!
வெல்லத் தமிழ்காக்க வேங்கையெனப் போராடு தோழா!

இந்திப் பகையொழிக்க இதயம் துடித்ததடி தோழி!
சொந்தத் தமிழ்காக்கத் துள்ளிப் புறப்படுவாய் தோழி!

அண்ணா குரல்கேட்டே ஆர்த்தெழுந்து விட்டேனடி தோழி!
பண்ணார் தமிழ்காக்கப் பாய்ந்து புறப்படுவாய் தோழா!

போர் முழக்கம் கேட்டவுடன் புத்துணர்ச்சி கொண்டு விட்டேன் தோழி!

வீரத் தமிழ்காக்க விரைந்து புறப்படுவாய் தோழா!
புல்லர்களின் இந்திமொழி போக்கித் தமிழ் காப்பேன் தோழி!
வெல்க தமிழ்! வெல்க தமிழ்! வெற்றி பெறுக நீ! தோழா!
வெறியாளர் இந்திமொழி வீழ்த்தித் தமிழ் காப்பேன் தோழி!
அறிவாளர் தமிழ் வாழ்க! அழியாத புகழோங்க! தோழா!
சனியான இந்திமொழி சாய்த்துத் தமிழ்காப்பேன் தோழி!
இனிதான தமிழ் வாழ்க! இசையோடு நீவெல்க! தோழா!

நாரா. நாச்சியப்பன்.

— 3-ம் பக்கத் தொடர்ச்சி—

தியர் எண்ணிக்கையைக் குறைத்திருக்கின்றனவே! பூகம்பங்கள் பல வெடித்து மண்ணையும் மக்களையும் விழுங்கியதும், "எண்ணிக்கையில் மிக்கவர்கள்" வாழ்கின்ற வடக்கில் தானே? இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? எண்ணிக்கை பெரும்பான்மை ஒன்றை மட்டும் வைத்து ஆட்சிமொழியை அமைக்கக்கூடாது என்பதைத் தானே?

அடுத்து இன்னொரு வாதத்தை, இந்தியைப் புகுத்துவோர் கைக்கொண்டிருக்கின்றனர். "அன்னியர் மொழி அல்லவோ ஆங்கிலம்? என்கின்றனர். யார் யார்? பிரித்தானியப் பொதுநல உறவில் அங்கம் வகித்து, பேரரசியாரின் தாள்களிலே மலர்களையும் மாம்பழக்கூடைகளையும் வைக்கும் நேரு கூறுகிறார்! ஆங்கிலம் பேசிப் பிறநாட்டாரிடம் கையேந்திக் கடன் பெற்றுவரும் மொரார்சியும் பிறரும் பேசுகின்றனர்! தன் ஆங்கிலப் புலமையால் அகில இந்தியாவுக்கும் ஐ. நா. வில் நியாயம் தேடித் தந்திடுவார் என்று கருதப்படுகிற கிருட்டின மேனனை அருகில் வைத்துக் கொண்டிருக்கிற தில்லிக் கொற்றத்தார் கூறுகின்றனர். அன்னிய நாடுகளிலே தம் பெருமையை முழக்க ஆங்கிலத்தைப் பயன் படுத்துவோர் கூறுகின்றனர்! ஆமாம்! தோழர்களே, அதைவிட இன்னொரு வெட்கக் கேடும் உண்டு! ஆட்சி மொழியாக ஆங்கிலத்தை ஏற்க மறுக்கும் இவர்களின் இயக்கத்திற்குப் பெயரான 'காங்கிரசு' என்பது எந்த மொழிச் சொல்! மேலைநாட்டு ஆங்கில மொழி தந்த சொல்! அந்தச் சொல்லை ஏற்றுக்கொள்கிற இவர்கள் நெஞ்சம், அந்தச் சொல்லைத் தந்த மொழியை ஏற்றுக்கொள்ள மறுப்பதேன்?

உங்களுக்கெல்லாம் இன்னொன்றும் சொல்வேன்! இந்தத் தாயகத்தார் விழிப்பும் எழுச்சியும் பெற்றிட காங்கிரசின் பிள்ளையார்சுழி எந்த மொழியால் போடப்பட்டது? இந்தியிலா? வடமொழியிலா? உருதுவிலா? குசராத்திலா? மராத்தியிலா? இல்லை! இல்லை!

காங்கிரசு வரலாற்றை அன்னி பெசண்ட் எழுதி வைத்திருக்கிறார். படியாதோர் கீழ் வருவதைப் டிக்கட்டும்!

"வங்காளம் பம்பாய், சென்னை முதலிய மாநிலங்களின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்டதாய் இம்மாநாடு அமையும்! **அப்பிரதிநிதிகள் ஆங்கில மொழியில் ஆழ்ந்த புலமையுடைய அரசியல் வாதிகள் ஆவார்கள்!"**

எங்கே தெரிந்தன இத்தொடர்கள்? எப்போது கூடியது இம்மாநாடு? எவர் விடுத்தது இந்த அழைப்பு? எதற்காகக் கூடினர் அவர்கள்?

நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்! இன்று இந்திக்கு ஆரத்தி எடுக்கும் காமராசர்களே! உங்களுக்கெல்லாம் இதயம் என்று ஒன்றிருந்தால் அது வெடிக்காமல் இருக்கட்டும்!

"ஆங்கில விற்பன்னர்கள் வருகின்ற அரங்கம்!" என்று விளம்பரப் படுத்தப்பட்ட அரங்கம், ஆசிரியர்களின் அரங்கமுமில்லை! பைரனும் செல்லியும், கீட்சும் வேட்சுவொர்த்தும்கூட விருந்த அரங்கமுமில்லை! இந்திய விடுதலைக்குக் கொடி பிடிக்கப் புறப்பட்ட பெரியவர்களின் கூட்டம் இது!

ஆம்! 1885 டிசம்பர் 25 முதல் 31 வரை நடந்த காங்கிரசு முதல் மாநாட்டிற்கு-தோற்ற விழாவுக்கு-அனுப்பப்பட்ட அன்பழைப்பின் இரண்டாவது பாரா இது! தோழர்களே, இது இரண்டாவது பாரா!

"கதிரவன் மறையாத ஆங்கில நாட்டின் பிடியில் கிடக்கின்றனர் இம்மக்கள்! இவர்கள் இழந்த விடுதலையை மீட்க, இவர்கள் தம்மைத் தாமே ஆளும் அரசினை அமைத்துக் கொள்ள, உரிமைபெற்ற சமுதாயத்தை உருவாக்கத்தான் இந்தத் தலைவர்கள் கூடுகின்றனர்!" என்ற கருத்தில் எந்த மாட்டை அன்னி பெசண்ட் வியந்து பாராட்டி எழுதினாரோ, அந்த மாநாட்டின் அழைப்பு தான், ஆங்கில வல்லுனர்கள் வருவதாகப் பறைசாற்றியது!

"நாட்டு விடுதலைப் பாதையை வகுக்க ஆங்கிலம் வல்லார் கூடுகின்றனர்! உரிமைபெற்ற சமுதாயத்தை உருவாக்க, இங்கிலாந்து மொழியில் புலமைபெற்றவர்கள் திரள்கின்றனர்!" என்றெல்லாம் தொடக்க விழாவுக்கு அழைப்பு அனுப்பியவர்கள்தான், இன்று "பிற நாட்டு மொழியை ஏற்பதா? அது அவமானமல்லவோ?" என்று வேதனைக் கண்ணீர்-நீலிக் கண்ணீர் - வடிக்கின்றனர். அன்று தன்னாட்சியை நிலைநாட்டத் தேவைப்பட்ட மொழி, இன்று ஆள்வதற்குத் தேவையில்லையோ? வெட்கம் கெட்டவர்களே! வெள்ளையன் சொல்லாம் "காங்கிர"சைச் சூட்டிக்கொண்டவர்களே! என்ன உங்கள் பதில்?

மற்றோர் உண்மையையும் நாம் இங்கே உணர வேண்டும். காங்கிரசு இந்தி வெறியர்களின் கூடாரமாவதற்கு முன்னர், அங்கேயும் ஆங்கிலத்தின் இன்றியமையாமையை உணர்ந்தவர்கள் இருந்திருக்கின்றனர். இன்றும்கூட அதன் இன்றியமையாமையையும் அதனால் இந்தியத் துணைக்கண்டத்தார் பெற்ற பயன்களையும் உணர்ந்த காங்கிரசார் இருக்கத்தான் செய்கின்றனர். அன்னிபெசண்ட் எழுதிய வரலாற்றின் மற்றொரு பக்கத்திலே இந்த உண்மை ஒளிர்கிறது. அண்மையில் இங்கிலாந்துக்குச் சென்று வந்த உமாயூன் கபீரின் பேச்சிலும் இந்தக் கருத்து ஒளிர்விடுகிறது.

முதல் காங்கிரசிலேயே, காங்கிரசாரின் வணக்கத்துக்கும் வாழ்த்துக்கும் உரியவரான தாதாபாய் நௌரோசி அவர்கள் பேசினார்கள்: "நாம் ஆங்கில மக்களிடமிருந்து ஒரு நல்ல அரசுக்கு (மக்களின்) பிரதிநிதித்துவம் எவ்வளவு அவசியமாகத் தேவைப்படுகிறது என்பதைக் கற்றிருக்கிறோம்!"

ஆங்கில மக்களிடமிருந்து தாதாபாய் நௌரோசி அவர்கள் குடியாட்சிப் பண்பின் அவசியத்தை உணர்ந்தாராம்!

இங்கிலாந்து மக்களிடமிருந்து கற்றுக்கொண்டாரென்றால் எதன் மூலம் கற்றுக்கொண்டார்? அவர்களின் மொழி மூலமாகத்தானே? தான் கற்ற ஆங்கிலத்தால் படிதறிந்த நூல்கள் மூலமாகத்தானே

குடியாட்சியின் இலக்கணத்தை அறிந்துகொள்ள ஆங்கிலம் உதவிற்றென்றால், இந்தியக் குடியாட்சி நடைபெறுதற்கும் ஆங்கிலமே இருப்பதில் என்ன தவறு?

அண்மையில் இங்கிலாந்துக்குச் சென்றிருந்த உமாயூன் கபீரும் இதைவிட ஒரு படி அதிகமாகவே சொன்னார். கபீரோ ஆங்கில மொழியின் மூலமாக இந்தியத் துணைக்கண்ட மக்கள் அரிய பல அறிவுரைகளைப் பெற்றிருப்பதாகச் சொன்னார்! இங்கிலாந்திலே இருந்துகொண்டு கபீர் இப்படிப் பேசியதை எவரும் கண்டிக்கவில்லை! தவறென்றும் சொல்லவில்லை! ஆனால் தென்னகத்தார் ஆத்திரம் அறிவை மறைக்கும். ஆங்கிலம் உங்கள் அறிவை வளர்க்கும்!

இன்றுவரை பல கோடிகள் செலவழித்தும் இந்தியால் பயனில்லை; இன்னும் எத்தனைக் கோடிகள் செலவழித்தும் பயனில்லை! ஐந்தில் வளையாதது ஐம்பதிலா வளையப்போகிறது? வாய்க்காலில் குதித்து நீந்ாதவனா, கடலை நீந்திக் கடக்கப்போகிறான்?


THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.



ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த ஊக்கணாங்குருவி எவ்வாறு கூடு கட்டியதோ அதே போன்றுதான் தற்காலத்திலும் கூடு கட்டுகிறது. அந்தக் கூட்டிலே எத்தகைய சிறப்பான மாறுபாடும் காணப்படவில்லை. அக்காலத்தில், புலி சிங்கங்கள் குகைகளில் வாழ்ந்ததாக வரலாறு வாயிலாகவும் இலக்கியங்கள் வாயிலாகவும் அறிகிறோம். தற்காலத்திலும் அவைகள் அவ்வாறுதான் வாழ்கின்றன—ஒரு சின்ன ஓடு வீட்டைக்கூட அவைகள் கட்டிக்கொள்ளக் காணோமே! அவைகளால் கட்டிக்கொள்ள முடியவில்லையே!! பாம்புகள் புற்றையும், எலிகள் வளையையும், கழுதைகள் குட்டிச் சுவரையும்தான் இன்னும் நாடி வாழ்கின்றன. **ஆனால்,**

மண் குடிசை கூட ஒழுங்காகக் கட்டத் தெரியாதிருந்த மனிதன் மட்டும் விண்ணை முட்டும் மாடமாளிகைகளையும் கூட கோபுரங்களையும் கட்டி ஒய்யார வாழ்க்கை நடத்துகிறான். **எதனால்?**

இதன் காரணம், அவன் ஏற்படுத்திக் கொண்ட மொழியும் அதனால் அவன் பெறும் கல்வியறிவுமே யல்லவா?

தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்கள்

**ஒரே வருடத்தில்**

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக

**இங்கிலீஷ்** தபால் மூலம் **கற்கலாம்**

சேர கடைசி தேதி: 9-8-60 | பயிற்சிகள் ஆரம்பம்: 11-8-60

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்கு வரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும். சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும்.

**முக்கிய அறிவிப்பு**:— (1) சேர விருப்பமுடையவர் கல்வி நிலையத்திலிருந்து அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். (2) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (3) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால், ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (4) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பயிற்சி யளிக்கப்படும். (5) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

**அச்சிட்ட மனுவையும் முழு விளக்கங்களையும் 8 பைசா தபால் பில்லை அனுப்பிப் பெறுக.**

இத்தனை ஊழல்களையும் வைத்துக் கொண்டுதான், இவர்கள் இந்தியை ஆட்சிமொழியாக்கப் போகின்றனராம்!

ஃ ஃ ஃ

"தென்னகமே! என் தாயகமே! இத்தனை நிலைகளையும் வைத்துத்தான் தொடுக்கிறேன் புரட்சிக்கனை!

புலவர்கள் பல்லாயிரவர் ஆண்டாண்டு காலமாய்ப் புகழ்ந்து ஏற்றியதும் உன் மொழியையே!

பகைகள் மோதின; வடவெறிகளும் சாடின; என்றாலும் புலமையில் மூத்தவளாய், பருவத்தில் இளையவளாய்த் திகழ்பவள் உன் மொழி மகளே!

அடலேறென எமை நடக்கவைத்தாள்; புலிப்போத்தென வளர்த்து விட்டாள்! ஆம்! அவளே எங்கள தாய்மொழி!

தங்கம் ஒளிரும்! வைரம் மின்னும்! நாள் மலர் சிரிக்கும்! கவிக்குயில் இசைக்கும். சிற்றாறு பாடும்! பேரருவி முழங்கும்! அத்தனையும் எங்கள் தங்கத்தமிழின் வடிவம்!

தாய்ப்பால் வள்ளுவன் முப்பால்! இட்ட அடி சமணர் நாலடி! வாளும் வேலும் தந்தது புறம்! காதலும் நெஞ்சும் தந்தது அகம்! ஆமாம்! இத்தனை வாழ்வையும் தந்தது, எங்கள் தமிழ்! எங்கள் தமிழ்!

இவளிடம் மலர்ந்த அருமலர்கள் கன்னடமும் களிதெலுங்கும் காவிய மலையாலமும்!

இத்தனை நாள்மலர்களும் சிரிக்கும் மறவர் கோட்டத்தில் மணம் பரப்ப, காகிதக் கனகாம்பரம் வருகிறது!

விழுதுபல விட்டு, எட்டிய இடமெலாம் நறுநிழலும் அருங்காற்றும் பரப்பியது எங்கள் தமிழ் ஆல்!

இதை வெட்டி அழித்துவிட்டு நிழல் தர வரப் போகிறதம், இந்திப்பனை!

கானல் நீரை நம்பி நாங்கள் மாளவோ? நாவறண்டு சாகாவோ!

வளர்த்து ஆளாக்கிய தாயகமே! வளமார் திராவிடமே! வளைக்கிறது பகையென்றால், வளைத்திடமாட்டோம்! வாளெடுத்து அதன் தலை கொய்திடத் தவறிடமாட்டோம்! இதோ ஆணை! எங்கள் உயிர் மீதாணை!" என்ற குரல் வெடிக்க, வஞ்சப் பகை முடிக்க நாளைய தினம் எழுகின்றனர் நாட்டின் மறவர்கள்!

ஆம்! முப்பத்தெட்டிலும் நாற்பத்தெட்டிலும் சந்தித்த பகையை அறுபதிலும் சந்திக்கின்றனர், திராவிடர்.

ஃ ஃ ஃ

"காவியக் கழனியே! கவிதை முழக்கமே! ஆற்றல் பண்ணையே! அறிவின் எழுச்சியே! தோன்றிய நாள் முதலாய்த் தொல்லுலகிற்குப் பல் வளமும் சேர்த்தவளே! உனக்கொரு தீங்கென்றால் உறங்குமா என் மனம்?

சோழன் காலத்தில் தமிழன் கடல் கடந்தும் தொடர்பு கொண்டது உன்னை வைத்துத்தானே!

மூவேந்தரும் தமிழகத்தைக் காத்துக்கொண்டதும், கடற் படை நடத்தியதும், கரிப்படை செலுத்தியதும், எங்கும் பகை முடித்ததும் உன்னை வைத்துத்தானே! தானையைப்பழக்க, ஆனையை அடக்க, கலத்தைச் செலுத்த வைத்திருந்ததும் உன்னைத்தானே! பிற மொழி உதவி நாடியா, அவன் செரு முகம் சென்றான்? அன்னியன் மொழியைக் கற்று அவன் வணிகம் நடத்தினான்? பின் ஏன் இன்றைக்குப் பிறர் மொழி எமக்குத் தேவை! பின் ஏன் நாங்கள் பிறன் மொழிக்கு மண்டியிட வேண்டும்?

தீண்டிய பகையை மாய்க்காது விடோம்! எம்மைத் தூண்டிய துடுக்கரை அடக்காது ஓயோம்!

தாய்த் தமிழே! தரளச் சுவடியே! இலக்கியப் பேழையே! இனிமைக் களஞ்சியமே! இதோ உந்தன் மீதாணை! இன்றே புறப்பட்டது கழகத்தோர் தானை!"

வெடிக்கும் இந்த முழக்கத்துடன் விடை கேட்கும் கட்டமாக அமைகிறது, நாளை பிற்பகல் கூடும் வேழப் படையின் காட்சி!

"65-ல் வேண்டாம். 90-ல் கொண்டு வாருங்கள்!" என்று வேண்டுகோள் விடுத்த தமிழகப் பாராளும் மன்ற உறுப்பினர்களின் முகத்திலும் கரி பூசிய குடியரசுத் தலைவரை நேரடியாகக் காணக் கிளம்பினர் தமிழ மறவர். அவர்கள் கவசம் பூணும் காட்சியே, நாளைய மாநாடு!

"என்றுமே ஏலோம் இந்தியை! எவருமே அடக்கிட முடியாது! இது உறுதி!" என்ற விடுதலைக் குரல் ஒலிக்கும் வீரர்கள் வாளுறை கழிக்கும் காட்சியே, நாளையப் போர் முழக்கம்!

அண்ணா தலைமை ஏற்கிறார்! நாவலர் திறந்து வைக்கிறார்! சம்பத் அழைக்கிறார்! அண்ணாநகரில் அணிவகுப்பு! தாளமுத்து நடராசன் அரங்கத்தின் முன் சபதமெடுப்பு!

இதோ நான் புறப்பட்டுவிட்டேன்; மரண சாசனம் எழுதிவிட்டேன். பெற்ற தாயையும் பிறராளவிடும் பணத்தாசைக்காரர்களைப் பற்றி, எனக்குக் கவலையில்லை! அந்தக் கழுகுகள் பற்றிக் கவலையில்லை எனக்கு! உணர்ச்சி மறவர் ஒரு சிலரேனும் அவர் வென்றே தீர்வர்! சிங்கத் தமிழரே! தெற்கின் மைந்தரே! திரள்வீர்! திரள்வீர்!

—செல்லையா.

மதுரையில்
செப்டம்பர் 17-ல்

மதுரை முத்துக் கூத்தரங்கத்தாரின் மூன்றாவது ஒலி முழக்கம்!

தோழர்
**எம். எஸ். அனந்தன்**
அவர்கள் எழுதிய

**'நெல்லிக்கனி'**

அரசியல் நாடகம்
நடைபெறும்

# பறந்த கிளி!

★ தினகரன் ★

பஞ்சவர்ணக்கிளி......

அது பிறந்து கண் திறக்கு முன்னமேயே அந்த வீட்டில் சேர்க்கப் பட்டது. வீட்டின் சின்னஞ்சிறார்களோடு அதுவும் ஒரு செல்லப் பிள்ளையாக வளர்க்கப்பட்டது. குழந்தைகள் பள்ளியில் பாடம் கற்றுக்கொள்ளும் நேரத்தில், கிளிக்கு வீட்டில் பேசக் கற்றுக் கொடுத்தார்கள். கிளி பேசுவதில் மட்டுமல்ல-கேள்விக்குப்பதில் சொல்லும் அளவுக்குத் தேர்ச்சிப் பெற்றது. கிளியை அவர்கள் கூண்டிலே அடைத்து வைக்க வில்லை. அந்த வீட்டில் எங்கு வேண்டுமானாலும் சுதந்திரமாகப் பறந்து திரியும்; தங்கும். கிளிக்கு மொழி தெரிந்த பிறகு அவர்கள் வீட்டுக்கதவைப் பூட்டிவைப்பதே இல்லை. அவர்கள் அத்தனை பேரும் எங்கு வெளியில் போனாலும் அந்த வீட்டிற்கு அத்தப் பச்சைக் கிளிதான் பாராக்காரன்.

'பால்காரி வந்தாள்; அம்மாவைக் கேட்டாள்.'' வாத்தியார் வந்தார்; தம்பியை விசாரித்தார். 'யாரோ ஒரு பிச்சைக்காரன் எட்டிப் பார்த்தான்; கத்தி விரட்டினேன் போயேவிட்டான்!'' இப்படி அவர்கள் திரும்பியவுடன் ஒன்றுவிடாமல் சொல்லிவிடும். அந்த வீட்டில் நடக்கும் விருந்து, விழாக்களில் வரவேற்பாளராக வாசலில் இருந்துகொண்டு வருபவர்களை "வாருங்கள்! வாருங்கள்!" என்று வாய் நிறைய அழைக்கும். ஒரு நாள் இரவு அந்த வீட்டில் திருடன் ஒருவன் மெல்லப் புகுந்து பெட்டகத்தின் அருகில் சென்று கள்ளச் சாவியையும் போட்டுவிட்டான். பார்த்துக்கொண்டே இருந்த கிளி "திருடன் திருடன்!" என்று கத்திக்கொண்டே பறந்து போய், அவன் கண்களைக் கொத்தி அவனைக் கதற வைத்துப் பிடித்துக்கொடுத்துவிட்டது. மறுநாள் அந்தக் கிராமத்தில் கிளியின் செயல் பற்றி புகழ்ந்து பேசாதார் ஊமைகளே!

கிளி ஒரு நாள் வாட்டமாக இருந்ததென்றால் அந்த வீடே சோகத்தில் மூழ்கிவிடும். அது பேசும்வரை சாப்பிடும்வரை யாரும் சரியாகச் சாப்பிடமாட்டார்கள். ஊரார் கண்பட்டுவிட்டது என்று திட்டி சுற்றிப் போடுவார்கள். மருத்துவரை அழைக்காத குறை தவிர மற்ற எல்லாம் நடந்து தீரும்!

ஒரு நாள்...

அந்த வீட்டில் தங்கச் சங்கிலி ஒன்று காணமற் போய்விட்டது. விடிந்ததும் வீட்டில் ஒரே ரகளை! எப்படிப் போனது? யார் வந்தார்கள்? நம் கிளிக்குத் தெரியாமல் வரமுடியாதே?

மறுநாள்...

வைர மோதிரம் ஒன்று காணவில்லை! "இரவு பார்த்தேனே! இருந்ததே! இதென்ன மாயம். இன்னும் கொஞ்ச நாளில் நாமே காணமற் போய்விடுவோம்மா?" வீட்டுக்காரர் குதித்தார். "உனக்குத் தெரியுமா இரவில் யார் வந்தார்கள்?'' கிளியைப் பார்த்துக் கேட்டார்.

"அந்நியர் யாரும் வரவில்லை" கிளி வருத்தத்தோடு பதில் சொல்லியது. வீட்டுக்காரர் குழப்பத்தோடு வெளியேறினர்!

மூன்றும் நாள்...

பெட்டகத்திலிருந்து ஐநூறு ரூபாய் மொத்தமாகக் காணவில்லை. வீட்டுக்காரருக்கு விழுந்தது சந்தேகம் பலர் மீது வெளியில் சொல்லவில்லை. கிளிக்கு மெத்த வருத்தம்-முன்னைப்போல் பேச்சில்லை, பரபரப்பில்லை.

ஒரு நாள் வெளியில் சென்றிருந்த வீட்டுக்காரர் கனல்கக்கும் விழிகளுடன் வேகமாக வந்தார். "பார்வதி பார்வதி"—தன் மனைவியை அழைத்தார். "பார்த்தாயா? இதோ இருக்கின்றன தங்கச் சங்கிலியும் வைர மோதிரமும்!" என்றார்.

"எங்கே இருந்தது? யார் வைத்திருந்தார்கள்?" ஆவல் ததும்பக்கேட்டாள்

"சத்தம் போடாதே! மானம் போகிறது, யார் எடுப்பார்கள். நமக்கு வீட்டிலேயே இருக்கிறது வினை. நல்ல வேளை நான் போலீசில் புகார் செய்ய நினைத்தேன். உன் மூத்த மகன்-உதவாக்கரை, ஊர்சுற்றி 'தெய்வசிகாமணி' இருக்கிறானே, அவன் செய்த வேலைதான் இது. எடுத்துக்கொண்டு போய் காசுக் கடையில் அடகு வைத்திருக்கிறான். தற்செயலாக இந்த விவரம் எனக்குத் தெரிய வந்தது. பணத்தைக் கொடுத்துத் திருப்பிக்கொண்டு வந்தேன்-இனி அவனை இந்த வீட்டிற்குள் நுழையவிடாதே! எங்கே அவன்? தோட்டத்துக்கு ஓடினார். தெய்வசிகாமணி கிளியைத் தூக்கி வைத்துப் பேசிக்கொண்டிருந்தான். "எனக்கு அப்பொழுதே தெரியும் நீங்கள் இருவரும் சேர்ந்துகொண்டு செய்த வேலை என்று-வார்த்தைகளை அவர் கணக்கின்றிக் கொட்டினார். கிளியைக் கூண்டிலே போட்டுப் பூட்டினார். அன்பு குறைந்தது.

"நான் என்ன செய்தேன். என்மேல் என்ன குற்றம்?" அவர் மனைவியிடம் கிளி வருத்தத்தோடு கேட்டது.

எல்லோரைக் காட்டிலும் அவன்தான் உன்னை அன்பாக நேசித்தானும். அதனால்தான் நீ அவன் இரவில் வந்து பொருள் எடுத்துச் செல்லும்பொழுது கத்தாமல் இருந்தாயாம்!

"அம்மா! எனக்காகக் கொஞ்சம் சிந்தியுங்கள்! உங்கள் மகன் எப்பொழுதும்போல் இந்த வீட்டிற்கு வருகிறார். போகிறார். அவர் உங்களை ஏமாற்ற வருகிறார் என்று நான் எப்படிச் சொல்லமுடியும். மாற்றான் ஒருவன் இங்கே நுழைந்தால் நான் சும்மா இருப்பேனா?

"நீங்கள் பெற்று வளர்த்த பிள்ளை அவர். அவரைப்பற்றி நான் உங்களிடத்திலேயே குற்றம்சாட்டமுடியுமா? அவர் என்மேல் அன்பாக இருந்தார் என்ற ஒரே காரணத்திற்காக என்மீது குற்றம் சுமத்தினால் இது வீண் பழி! என்னால் இதைத் தாங்கிக்கொள்ள முடியாது." கிளி கண்ணீர் வடித்தது! "அம்மா இந்தக் கதவைக் கொஞ்சம் திறந்துவிடுங்கள்"

"ஏன்?"

"திறந்துவிடுங்கள் சொல்லுகிறேன்."

கூண்டின் கதவு திறக்கப்பட்டது.

"அம்மா இத்தனை நாட்களாக நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் என்மீது காட்டிய அன்புக்கு மெத்த நன்றி-அதற்கு வணக்கம் செலுத்துகிறேன். உங்கள் உள்ளத்தில் என்னைப்பற்றித் தவறான கறை படிந்துவிட்டது. அது பயிராகி விளைவதற்குள் நான் விடை பெற்றுக்கொள்ளுகிறேன். நான் இங்கே கூண்டுக் கிளியாக வாழ்வதைக் காட்டிலும்-அதோ ஆகாய வீதியில் என் இனம் சுதந்திரமாக சிறகடித்துத் திரிகின்றன-நானும் அங்கே போகிறேன்! என் இனத்தோடு வாழப் போகிறேன்! "விடை கொடுங்கள்!" என்று கத்திக்கொண்டே கிளி பறந்தது.

# வெண்பாப் போட்டி

## 2. தேனே கததவைத் திற.

இந்திக்கும் ஏற்கும் இடும்பர்க்கும் மானமிலார்
புந்திக்கும் ஒற்றைப் புதைகுழியில் - சந்திக்க
வானேறத் தீந்தமிழின்வாகைஎன் தோளேறத்
தேனே கதவைத் திற.

கையில் வளைகுலுங்கக் கண்ணில் ஒளிதுலங்கத்
தையில் மணமுடித்த தையலே - மையலால்
வானூர்தி யின்துணையால் வந்தேன் உனைக்காணத்
தேனே கதவைத் திற.

அருப்புக்கோட்டை. எம். எஸ். இராமசாமி.

செங்கை விரல்நீட்டிச் சேல்விழிசேர் மை காட்டி
இங்கே வருக வெனவழைப்ப, - மங்கைமலர்த்
தேனே உனைப்பருகித் தெம்மாங்கு பாடிடவந்
தேனே! கதவைத் திற.

சா. நடராசன், சென்னை-12.

நெடுநேரம் ஆனதென்று நேரிழையுன் நெஞ்சம்
கடுங்கோபம் கொண்டதுவோ? கண்ணே - நடுநின்று
தானுகச் சிந்தித்தால் தானறிவாய் தாபத்தைத்
தேனே, கதவைத் திற!

பூவை. அமுதன், சென்னை-6.

சொட்டும் இளமைத் துடிப்புணர்ந்தும் தாமதமேன்
விட்டுப் பிரியேன்என் வேல்விழியே! - தொட்டணைத்து
மானே உனைக்கூட மார்பகந்தான் ஏங்குதடி!
தேனே கதவைத் திற!

வடுவூர் இளங்கோ, நாகபட்டினம்.

இந்தி யெனும்வேசி யின்பத்தை நான்கொள்ள
வந்த பெருநோயும் வாட்டுதம்மா - செந்தமிழாம்
தேனே! திசையறியேன்; தேடித்தான் இன்றேவந் -
தேனே; கதவைத் திற.

புலவர். அரி. மதி, திண்டிவனம்.

பண்பிலன் கேண்மை பரத்தையைச் சேர்த்ததால்
அன்பினள் உன்னை அகற்றினேன்; - துன்புற்றேன்,
மானே! இனித்தவறேன் மாண்புடனே வாழ்ந்திடுவோம்
தேனே! கதவைத் திற.

கோப்பை திருவரங்கன், மேலூர்.

போருக்குச் சென்றேன்! புதைத்தேன் பகைப்படையை
யாருக்கும் தீங்கிழைக்கும் இந்திமொழி - வேருக்கு
நானே வெடிவைத்தேன்! நல்லபடி வந்துவிட்டேன்!
தேனே கதவைத் திற.

கோ. வில்வநாதன், தெ. க. பெ. நத்தம்.

காய்ந்த மலரானேன்; காரிகையே உன்நினைவால்!
தேய்ந்தே உருகுகின்றேன்; தெள்ளமுதே! - ஆய்மலரே!
மானே! மரகதமே! மாணிக்க மேகலையே!
தேனே! கதவைத் திற!

ந. தா. அண்ணுமலை, நல்லாண் பிள்ளை பெற்ருன்.

பஞ்சணை மீதில் பரப்பியுள்ள வாசமலர்
நெஞ்சினை யள்ளுதடி நேரிழையே! - கொஞ்சிடுவேன்
ஏனே தயக்கம் எனக்குன் கொவ்வை இதழ்
தேனே கதவைத் திற.

இரா. சி. சுந்தரி, மணிமங்கலம்.

அச்ச மெதற்கோ அணங்கே! பணிந்தென(து)
இச்சை தணித்தின்பம் ஈந்திடுவாய்;-இச்சமயம்
நானேங்க நீதனியே நள்ளிரவைப் போக்காமல்
தேனே கதவைத் திற!

தி. இர. வெங்கடேசன், சென்னை-31.

இந்திச் சருவறுக்க இன்றுநான் போகின்றேன்
பிந்தி வருவேனே? வாரேனே? - முந்திவந்து
கான மொழியால் களித்து விடை கொடுக்கத்
தேனே கதவைத் திற.

புதுவை இரத்தினசனுர்த்தனன், தாம்பரம்.

தாயகத்தை மீட்பேன்; தமிழ்காப்பேன்; நாடாளும்
நாயகர்தம், வஞ்சம் தகர்த்தெறிவேன்; - தூயதமிழ்
மானத்தைக் காக்க மறவருடன் போகின்றேன்;
தேனே கதவைத் திற.

சா. கா. சாகுல் அமீது, சித்தையன் கோட்டை.

கானல் வெளிகடந்து கல்முள் வழிநடந்து
நானுன் மனைவாயில் நாடிவந்தேன்! - கானடையா
மானே! மதிலேறி வந்துமுனைக் காணேனே?
தேனே! கதவைத் திற.

பா. கிருட்டினமூர்த்தி, சென்னை-11.

முல்லைக் கொடிநிகர்த்த மூத்தமிழே முக்கனியே
கொல்லைப் புறமாகக் கூடிடவே - எல்லையிலா
ஊனே பறிக்கின்ற உள்ளபகை நின்றுலும்
தேனே கதவைத் திற.

பசுமலை வீர. முருகேசன், மதுரை.

வாகைமலர் என்கழுத்தில் வைரம்போல் மின்னுதடி!
தோகையே! வந்து தொழுதிடடி! தோல்விகண்டாள்
ஈனப் பரத்தையவள் இந்தியென்னும் பேர்படைத்தாள்
தேனே கதவைத் திற.

பெ. அ. இளஞ்செழியன், பெருவளப்பூர்.

தாய்மொழியைக் காக்கத் தளபதிசம் பத்துடனே
போய்விட்டார் வீரர்களும் போர்க்களத்தே - வேய்குழலே
நான்செல்லு முன்னேஎன் நங்கை உனைக் காணவந்தேன்
தேனே கதவைத் திற!

கோ. புகழேந்தி, புதுவை.

அண்ணுவும் சம்பத்தும் ஆர்த்தெழுந்த தோழர்களும்
மண்ணதிர ஊர்வலம்போம் மாட்சியினைக் - கண்ணுர
மானே நீ காண்பாய் மறவருடன் நான்போகத்
தேனே கதவைத் திற.

கோமகி, கரந்தை.

கொல்புருவ வில்லோடு கூர்விழியின் அம்பினையும்
நல்லதமிழ் சாக்கவே நானெடுத்துச் - செல்லவந்தேன்,
வீணேதான் மோதவரும் வெற்றுமொழி தான்மடியத்
தேனே கதவைத் திற.

செல்வி, கந்தராசபுரம்.

இல்லாளும் இல்லிருக்க 'ஈர்விழியாள்' பின்னுற்போம்
பொல்லாத கோவலன்போற் போதறியேன் - சொல், ஐயம்
ஏனும்? வெகுளி எதற்காம்? இவண்சற்று
தேனே கதவைத் திற.

குறள், உப்பிலிபாளையம்.

சொந்தநாட் டின்பெருமை தோன்றி மிளிருங்கால்
இந்தியெனும் பீடைவந் தெட்டுவதோ? - இந்தியினை
நானே முறியடிப்பேன் நம்மொழியைக் காத்திடுவேன்
தேனே கதவைத் திற.

ம. ரா. மதியரசு, மணிமங்கலம்.

நல்ல தமிழிருக்க நச்சுமொழி இந்தியெனும்
கொல்லும் அரவினையோ கொஞ்சிடுவார் - புல்லேன் நான்
மானே உனைவிட்டு மாண்பில்லாப் பெண்டிர்தமைத்
தேனே கதவைத் திற.

க. பொ. இளர்வழுதி, கலிதீர்த்தான் குப்பம்.

## வெண்பாப் போட்டி 3.

ஈற்றடி : நீர்மேல் எழுந்த நெருப்பு.

இறுதி நாள் 13-8-'60

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.